**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி**

முன்னிலை : திரு.N.பாரதிராஜன், பி.ஏ., பி.எல்.,

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, பொள்ளாச்சி.

2024 ம் வருடம் பிப்ரவரி திங்கள் 26 ம் நாள் திங்கள்கிழமை

**இ.ம.எண்.01/2023 இன் அ.வ.எண்.123/2018**

1) கிணத்துக்கடவு தாலூக்கா, ஆண்டிபாளையம் அஞ்சல், வஞ்சிபாளையம் கிராமத்தில் வசிக்கும் சுமார் 65 வயதுடைய திரு.பழனிசாமி கவுண்டர் மகன் திரு.ஆறுச்சாமி.

2) கிணத்துக்கடவு தாலூக்கா, ஆண்டிபாளையம் அஞ்சல், வஞ்சிபாளையம் கிராமத்தில் வசிக்கும் சுமார் 60 வயதுடைய திரு.நாச்சிமுத்து மகன் திரு.சுப்பிரமணியம்.

3) கிணத்துக்கடவு தாலூக்கா, ஆண்டிபாளையம் அஞ்சல், வஞ்சிபாளையம் கிராமத்தில் வசிக்கும் சுமார் 50 வயதுடைய லேட்.பழனிசாமி மனைவி திருமதி.சாந்தாமணி. ... மனுதாரர்கள்/வாதிகள்

/ எதிர் /

1) பொள்ளாச்சி தாலூக்கா, ஆண்டிபாளையம் அஞ்சல், வஞ்சிபாளையம், தெற்கு தோட்டம், தோட்டத்துச்சாளையில் வசிக்கும் சுமார் 35 வயதுடைய திரு.நடராஜ் மகன் திரு.ரத்தினம்.

2) கிணத்துக்கடவு தாலூக்கா, ஆண்டிபாளையம் அஞ்சல், வஞ்சிபாளையம் கிராமத்தில் வசிக்கும் சுமார் 35 வயதுடைய லேட்.பழனிசாமி மகன் திரு.சதீஷ்குமார்.

3) பொள்ளாச்சி தாலூக்கா, ஆண்டிபாளையம் அஞ்சல், வஞ்சிபாளையம், தெற்கு தோட்டம், தோட்டத்துச்சாளையில் வசிக்கும் சுமார் 32 வயதுடைய லேட்.பழனிச்சாமி மகன் திரு.ஆனந்தராஜ்.

4) பொள்ளாச்சி தாலூக்கா, ஆண்டிபாளையம் அஞ்சல், வஞ்சிபாளையம், தெற்கு தோட்டம், தோட்டத்துச்சாளையில் வசிக்கும் சுமார் 62 வயதுடைய திரு.சுப்பே கவுண்டர் மகன் திரு.நடராஜ்.

... எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள்

இம்மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள கூடுதல் ஆவணத்தை அசல் வழக்கில் தாக்கல் செய்வதில் ஏற்பட்ட காலதாமதத்தை மன்னித்து மனுதாரர் தரப்பு ஆவணமாக ஏற்றுக்கொள்ள வேண்டி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 7 விதி 14 மற்றும் பிரிவு 151ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனு தாக்கல் நாள் : 23.11.2022.

இம்மனுவானது கடந்த 05.02.2024 தேதியன்று இறுதி விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.M.A.கனகராஜ் அவர்கள் முன்னிலையாகியும், 1 மற்றும் 4 எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.V.மதிசேகர் அவர்கள் முன்னிலையாகியும், 2 மற்றும் 3 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.D.நந்தகோபால கார்த்திகேயன் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதுரைகளைக் கேட்டும், இதுநாள் வரையில் எனது கவனமான பரிசீலனையில் இருந்து வரும் வழக்காவணங்களை பரிசீலித்தும், இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கிடும்...

## இறுதி உத்தரவு

முடிவில், மனுவுடன் தாக்கல் செய்துள்ள ஆவணத்தின் தொடர்புடைமை மற்றும் செல்லுபடி தன்மைக்கு உட்பட்டு (Subject to Proof and relevancy of document) இம்மனு அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவு 2024ம் வருடம் பிப்ரவரி திங்கள் 26ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது.

**(ஒப்பம்)/- N. பாரதிராஜன்**
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி.

---

**இறுதி உத்தரவு**
இ.ம.எண்.01/2023 இன் அ.வ.எண்.123/2018
நாள் : 26.02.2024
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
பொள்ளாச்சி.

---